05.09.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 205/2018

அ.சா.24

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீரங்கன் | | |
| த/பெ | முனுசாமி | | |
| கிராமம் | பனையபுரம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 49 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கார் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டு விழுப்புரம் இரயில்வே நிலையத்தில் என் காரை நிறுத்தி தொழில் செய்து வந்தேன். எங்களது கார் நிறுத்தம் இரயில்வே நிலையத்திற்குள் உள்ள இரும்பு பாதை காவல் நிலையத்தில் அருகாமையில் தான் நிறுத்தோம். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வண்டி ஓட்டிவிட்டு பாண்டிச்சேரியிலிருந்து வந்துக்கொண்டு இருந்தேன். அங்கு யாரையோ அடித்தார்கள் , உதைத்தார்கள் என அங்கு இருந்தவர்கள் சத்தமாக பேசிக்கொண்டார்கள். அங்கு ஒரு போலீஸ்காரர் வந்தார். நான் இதற்கு மேல் இங்கு இருந்தால் வம்பு என்று வீட்டிற்கு கிளம்பிவிட்டேன். வந்த போலீசார் என்னிடம் விலாசம் கேட்டு எழுதிக்கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னை நீதித்துறை நடுவர் யாரும் விசாரிக்கவில்லை. ஆனால் என்னிடம் காட்டப்படும் விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் பதிவு செய்த வாக்குமூலத்தில் உள்ள என்னிடம் காட்டப்படும் கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.10 ஆகும். இது குறித்து என்னை காவல் துறையினர் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

கடந்த 06.05.2014ந் தேதி புதுச்சேரிக்கு சவாரி சென்றுவிட்டு பகல் சுமார் 12 மணியளவில் விழுப்புரம் இரயில்வே காவல் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள எங்கள் கார் நிறுத்தத்திற்கு வந்தபோது காவல் நிலையத்தில் அடிக்காதீர்கள் அடிக்காதீர்கள் என்று ஒரு ஆண் அலறும் சத்தம் கேட்டது என்றும், பைப்பால் அடிக்கும் சத்தம் டமால் டுமில் என்று கேட்டது என்றும், அது போன்ற சத்தத்தை இது வரையில் அந்த காவல் நிலையத்தில் கேட்டது இல்லை என்றும், நான் அங்கு சென்று பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மறுநாள் 07.05.2014ந் தேதி ஜெயவேல் என்ற நபரை விசாரணை செய்தபோது உடல்நிலை மோசமாகி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு போலீஸ் வாகனம் சுமோவில் காலை 10 மணியளவில் எடுத்து சென்றதாகவும், போகும்வழியில் அந்த நபர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன் என்று சொன்னேன் என்றும், சொன்னால் சரியல்ல. இது சம்மந்தமாக 10.05.2014ந் தேதி விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் அதில் அவரிடம் நடந்தவைகளை சொல்லி கையொப்பம் செய்தேன் என்றும், பிறகு சிபிசிஐடி ஆய்வாளர் விழுப்புரம் அவர்கள் விசாரணை செய்தார்கள் என்றும், நான் நடந்தவைகளை சொல்லிக்கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

**இல்லை**

**மறுவிசாரணை**

**இல்லை.**